ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

स्तोकभक्तितोऽपि भक्तपोषिणे नमश्शिवाय
माकरन्दसारवर्षिभाषिणे नमश्शिवाय ।
एकबिल्वदानतोऽपि तोषिणे नमश्शिवाय
नैकजन्मपापजालशोषिणे नमश्शिवाय ॥

नक्षत्रमालिका ॥

யாவருயினும் சுத்தமான சித்தவிருத்தியுடனிருந்துகொண்டு அற்பமாக பக்திசெய்தாலும், அதனால் சந்தோஷத்தையடைந்து, அவனுக்கு அனுக்கிரகம்செய்யும், சிவபெருமானையும்பொருட்டு வந்தனம். மிகவும் சுவைபொருந்திய சிறந்த மாம்பழத்தின் ருசிபோன்ற மொழிகளையுடையவரான பரமேசுவரனையும்பொருட்டு நமஸ்காரம். பக்தியுடன் ஒரு பில்வதளத்தை எடுத்து அர்ச்சித்தாலும், அதனால் சந்தோஷத்தையுடையவரான மஹாதேவருக்கு வந்தனம். பல ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபக்கூட்டங்களை நாசம் செய்கிறவரான ஸ்ரீ சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

பூலோகத்தில், மானிடராக அவதரித்து, சம்ஸாரமென்னும் பெரியகடலில் அமிழ்ந்து பலவிதக்கஷ்டங்களை அனுபவிப்போர்களுக்கு, அக்கஷ்டங்களிலிருந்தும் விலகவேண்டுமானால் ஸ்ரீ பரமேசுவருடைய அனுக்கிரகமே முக்கிய ஸாதனமாகும். அந்தப் பிரபுவை ஆராதிப்பதும் சுலபம்தான். அதாவது, அற்ப பக்திசெய்தாலும், அல்லது ஒரு பில்வபத்திரத்தை அவருக்கு அர்ப்பணம் செய்தாலும் அவர் மிகுந்த சந்தோஷத்தையடைந்து, முன் பல ஜன்மங்களில் நம்மால் செய்யப்பட்ட பாபங்களை அகற்றிச் சம்ஸார கஷ்டங்களைப்போக்கி உத்தமமான சுகத்தையடையும்படி அனுக்கிரகிப்பார். ஆகையால், அவரை ஆராதிக்கவேண்டியது முக்கியமாகும்.

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

குரோதன-௵ தை-௴ ௧௫௳


## காலத்தின் கொடுமை.

(௧௧௯-வது பக்கத்தொடர்ச்சி.)

அவைகளில் முதலாவது ஹிந்து தேவஸ்தான மசோதா. இது இந்துக்களின் தர்மஸ்தானங்களைக் கூடியசீக்கிரம் ஸ்வரூபமேயில்லாமல் மாற்றவேண்டியதற்காக ஏற்பட்டிருக்கின்றது. தேவாலயங்களையும் மடங்களையும் மற்றுமுள்ள தர்மஸ்தாபனங்களையும் ரக்ஷிக்கவேண்டிய பாத்தியதைபெற்ற தர்மகர்த்தாக்கள் ஆங்காங்குப் பாதுகாத்துவருகிறார்கள். இவ்விதம் பாதுகாப்பவருள், எவராகிலும் தம் கடமையைச் சரிவர நடத்தாமலிருந்தால், அவரை வரவழைத்து "நீர் உமது காரியங்களைச் சரியாய்க் கவனித்து நடத்தவேண்டும்" என்றுகூறி அவர்கள் நடத்தாவிட்டால் வேறு யோக்கியரான ஒருவரை நியமித்துச்சரியாய் நடைபெறும்படி செய்யவேண்டியது உசிதமாகும்; அவ்விதம் செய்தலே அந்தத் தருமாபிவிருத்திக்குக் காரணமாகும். அஃதன்றி ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சம்பளம் கொடுத்து, பல அதிகாரிகளை நியமனம்செய்து, அவர்களிடம் நூற்றுக்கணக்காகச் சம்பளம் பெறும் அநேகம் குமாஸ்தாக்களையும் ஏற்படுத்தி நியமங்களையும் பலவாறாகப் புஸ்தகரூபமாய் விரித்தால் இவைகளால் தர்மபரிபாலனம் எங்ஙனம் சரியாய் நடைபெறும்? இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் வேலைக்காரர்களுக்குமாத்திரம் வருஷம் ஒன்றுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் சம்பளச் செலவாகும் என்று தோன்றுகிறது. இதைவிட்டு வேறு செலவுகளும் அதிகம்உண்டு. இவைகளுக்கெல்லாம் குரங்கு அப்பம் பிரிவினைசெய்த சமாசாரமாய்த் தர்மசொத்தைப்பலிகொடுக்க வேண்டியதைத்தவிர வேறு

கதி என்ன? தர்மஸ்தாபனங்களில் வரும்படி வந்தாலும் வராவிட்டாலும், பகவானுக்கு ஆராதனம் நடந்தாலும் நடக்காவிட்டாலும் இந்த ஆராதனத்தை அவசியம் நடத்தியே தீரவேண்டும். மேலும், லோககுரு பீடங்களில் தற்காலம் அமர்ந்திருக்கும் சில ஆசார்யாள் லோகக்ஷேமத்தையே முக்கியமாய்க்கருதிப் பாடுபடுகிறவர்களாகவும், ஆங்காங்கு ஜாதி, மதம், அதிகாரி இவைகளுக்குற்றவாறு முறைப்படி ஸநாதன தர்மங்களைப் பலவிதமாய்ப் புகட்டி நடைபெறும்படி செய்கிறவர்களாகவும் தம் பூர்வாசார்யாளின் கருத்தின்படி பலவிடங்களிலும் தேசசஞ்சாரம் செய்து தம் சரீரசிரமத்தை அற்பமேனும் கவனியாமல் தர்மஸ்தாபனம் செய்துகொண்டு வருகிறவர்களாகவும் இருக்கிறார்களென்பது எங்கும் பிரசித்தமே. கலியின் கொடுமையால் தபிக்கும் இந்த தேசத்தில் தற்காலம் ஆதியிலவதரித்த பரமாசார்யர்களைப்போல் இந்த ஆசார்யர்கள் அவதரித்திருக்கிறார்கள். இவர்களால் நம்தேசம் கூடியசீக்கிரம் க்ஷேமத்தை அடையுமென்று பல ஆஸ்திகர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்தசந்தர்ப்பத்தில் அம்மஹான்களுக்கு தர்மஸ்தாபன மசோதா என்கிற பெரிய நிர்ப்பந்தத்தைக் கொடுத்தால் இதில் கட்டுப்படவேண்டுமென்கிற நிர்ப்பந்தம் அப்பெரியார்களுக்கு என்னவந்திருக்கிறது? ஒருசமயம் இந்த நிர்ப்பந்தம் இவ்விதமே நிலைபெற்றால் இந்த ஸ்தானங்களைவிட்டு இம்மஹான்கள் விலகமாட்டார்களென்று எப்படிக் கூறமுடியும்? இந்த ஸ்தானத்திலிருப்பதால் பொதுஜனங்களுக்குப் பலமாதிரியான நன்மையைச் செய்வதைத்தவிர தாங்கள் சொந்தமாக யாதொரு சுகத்தையும் பெறவில்லை; கருதவுமில்லை. இதைவிட்டு விலகினாலும் தற்காலம் அவர்களால் அடையப்படும் சுகத்திற்கு அற்பமேனும் குறைவின்றி அதிகமான சௌகரியமும் தம் ஆச்ரமத்திற்குற்ற விசேஷ தபஸ் ஸித்தியையும் பெறுவார்கள் என்பதில் அற்பமேனும் ஐயமில்லை. ஆனால் பொதுஜனங்களுக்கு இப்பொழுது ஏற்படும் சில உபகாரமும், சில தர்மகைங்கரியங்களும் நடைபெறாது. இந்த ஸ்தானத்தில் இவர்களுக்குப்பதிலாக இதைப் பாதுகாக்கவருபவர்கள் எம்.ஏ.,பி.ஏ., (M.A., B.A.,) பட்டதாரியான ஒருவரையோ அல்லது ஐ. ஸி. எஸ். (I. C. S.) பட்ட

தாரியையோ தங்களிஷ்டப்படி தர்மபரிபாலனம் செய்கிறவரை உடனே வரும்படி ஆர்டர் போட்டுவிடுவார்கள். அவர்கள்வந்து தங்களுக்கு மானேஜராக, இந்து என்கிற சப்தத்தைக்கூடச் செவியுறாத ஓர் மேல்நாட்டாரைச் சேர்த்துக்கொள்வார்கள். இவ்விருவர்களும் இந்து தர்மங்களை நடத்தவும், பிறருக்கு உபதேசிக்கவும் ஆரம்பித்தால் நம் தர்மம் எவ்வளவு நன்றாய் நடைபெறும்? கஷ்டம்! கஷ்டம்!! நம் ஸநாதனதர்மங்களை எழுரை நாட்டான் என்று பிரசித்திபெற்ற பகவான் பூர்ணமாக அபிமானித்திருப்பதாகத் தெரிகின்றது. இவன் ஒருவனே போதும். கலி அரசனும் இவனுக்கு சகாயம்செய்ய முன்நிற்கிறான்.

(தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# வரருசி.

---

(உசூ-வது பக்கத்தொடர்ச்சி.)

வெறுப்புக்கொண்டவரான அப்பாணினியும், அவளுடைய வார்த்தையை வெகுமானித்தவராய், ஹிமாலயஞ்சென்று கொடூரமான தவத்தால் பாலசந்திரபூஷணரான பரமேச்வரனை உபாஸித்தார். சந்தோஷங்கொண்ட சிவபெருமானிடமிருந்து சகல வித்தைகளுக்கும் முகமாய் விளங்காநின்ற புதிய வியாகரணத்தையும் அடைந்தார். மறுபடியும் பாடலிபுரம் வந்துசேர்ந்து, வரருசியையே வாதத்திற்கு அழைத்தார். அவ்விருவருக்கும் வாதம் நிகழ்ந்தபோது எழுதினங்கள் சென்றன. எட்டாவது நாளில் பாணினி வரருசியால் ஜயிக்கப்பட்டார். அப்போது ஆகாயப்பிரதேசத்திலுள்ள பரமசிவன் கோரமான ஹுங்காரத்தைச் செய்தார். அதனுடனேயே அப்போது அந்த ஐந்திரமான வியாகரணம் நசித்துவிட்டது. பிறகு வரருசிமுதலான சகலரும் பாணினியால் தோற்கடிக்கப்பட்டவர்களாய் மூடர்களுமானார்கள். நினையாமலே நேர்ந்த அவ்வனர்த்தத்தைப் பொறுக்காத வரருசி,

தேடப்பட்ட தங்கப்பொருளை ஹிரண்யகுப்தன் என்ற வைசியனின் வசத்தில் ஒப்பிவைத்துவிட்டு, அத்தோல்வியையும் தனிமையில் மனைவியிடம் சொல்லிவிட்டு, அவளால் அனுமதிக்கப்பட்டுச் சங்கரனை ஆராதிப்பதற்குத் தவஞ்செய்யப் பனிமலையடைந்தார்.

கொடூரமான தவம் செய்யச்சென்ற புருஷனுக்கு எவ்விதத்தாலும் மங்களத்தை விரும்பினவளும், பதிவிரதைகளின் முன்னால் நிற்பவளுமான உபகோசை, தினந்தோறும் கங்கையில் நீராடி, நியமங்களுடன் விரதமுள்ளவளாய்த் தெய்வங்களைப் பூஜித்துவந்தாள். ஒருசமயத்தில் கங்கைக்கரையில் சஞ்சரிப்பவளும், பிரதமை சந்திரகலைபோல் ஜனங்களின் கண்ணைக் கவர்கின்றவளுமான இவளை, ராஜபுரோஹிதரும், தண்டாதிபனும், மந்திரிகுமாரனும் தற்செயலாய்க்கண்டு மன்மதபாணத்திற்கு லக்ஷியமாயினர். வெகுநேரமாய் நீராடிவிட்டுச் சாயங்காலம் வருகின்ற அந்தப் பதிவிரதையை மந்திரி குமாரன் நடுவழியில் அடமாய்த்தடுத்தான். நாதனற்ற அவள் தன்னைக்காப்பதற்கு ஒருபாயத்தையுங் காணாதவளாய் அக்கணத்திலேயே தோன்றின பிரதிபையால் அவனைப் பார்த்துச் சொல்லலானாள்— “மங்களமுள்ளவரே, நான் நற்குலத்தில் ஜனித்தவள். எனது கணவனோ பிரயாணத்திலிருக்கிறவர். அடாதகாரியம் செய்வதற்கு இவ்விடமும் காலமும் உசிதமாய் இல்லை. நாளைத்தினம் பட்டணத்து ஜனங்கள் வஸந்தோத்ஸவத்தில் மனத்தை செலுத்திக்கொண்டிருக்கும்போது, இரவில் முதலாவதுயாமத்தில் உம்மால் எனது இல்லம் வரப்படட்டும்” என்று தெரிவிக்க, அவனும் அப்படியேயென்று சொல்லிவிட்டு அவளை விட்டுவிட்டுச் சென்றான்.

பிறகு சிறிதுதூரஞ்செல்லும்போது, காமங்கொண்ட உபாத்தியாயரால் தடுக்கப்பட்டாள். இவனுக்கும் முன்போலவே அதே இரவில் இரண்டாவது யாமத்தில் சங்கேதத்தைக் கொடுத்து, நாதனையே மனதால் தியானித்துக்கொண்டு, சிறிதுதூரம்போகையில், தண்டாதிகாரியால் வளைக்கப்பட்டவளாய், அவனுக்கும் அதே இரவைக் குறிப்பிட்டு மூன்றாவது யாமத்தில் சங்கேதத்தைச் செய்துவிட்டுத் தெய்வச்செயலாய் அவனாலும் விடப்பட்டவளாய்த் தன்னுடைய அதிருஷ்டத்தையே அடிக்கடி நிந்தித்துக்

கொண்டு, "பூஜ்யரானயமதர்மராஜரே, என்னென்னைத் தூர்த்தர்களுக்கு மாம்ஸாகாரமாக்குகிறீர்? நான் அழிவுள்ள சரீரத்தால் வெறுப்புள்ளவளாகிறேன். நடத்தையாலோ அவ்வாறில்லை. புருஷன் யாத்திரையிலிருக்கும்போது குலமாதர்களுக்கு இறப்பதே சிறந்தது. ரூபத்தைக் கண்டுகளிக்கும் உலகத்தின் நேத்திரர்களுக்குப் பாத்திரமாயிருப்பது சிறந்ததாகாது" என்று மனதில் சிந்தித்துக் கொண்டு மிகுந்த துக்கத்தை அனுபவித்தவளாய் மிகவும் புலம்பினாள். அழுகின்ற அவளையும் சேடிகள் சமாதானப்படுத்தி, இவர்கள் எப்படியாவது அங்குவரட்டும். தங்கள் துஷ்டத்தனத்தின் பயனை அனுபவிக்கட்டும் என்று சொன்னார்கள். பதிவிரதாமணியாயும், அடிக்கடி தனது சரீரத்தைக்குறித்துத் துக்கிக்கிறவளாயும், ஆகாரமில்லாமலே புருஷனுடைய குணங்களை மெச்சுவதில் வியாபரித்தவளாயுமுள்ள அவளால் அவ்விரவு நான்கு கணம் போல் கழிக்கப்பட்டது. காலையிலும் பிராமணர்களின் பூஜைக்காக, ஹிரண்யகுப்தனுடைய அருகிலிருந்து சிறிது பணம்கொண்டுவருவதற்கு ஒருசேடி அனுப்பப்பட்டாள். அந்த வியாபாரியும் தானாகவேவந்து, உபகோசையை ஏகாந்தத்தில் அழைத்து, "மங்களமுள்ளவளே, உனது லாவண்யத்தால் மோஹித்தஎன்னை அடைந்துகொள். இல்லாவிடில் சாக்ஷியில்லாமல் உனது புருஷனால் கொடுக்கப்பட்ட பொருளைத் தரமாட்டேன்" என்று லஜ்ஜையில்லாமல் உளறினான். இடியால் இடிக்கப்பட்டவள்போல் நடுங்கின அவள் கணநேரம் என்னசெய்வது என்று தெரியாதவளாய் என்னகதி? இந்த போக்கிலியும் அதே போக்கிலிகளை அனுசரிக்கிறான் என்று மனதில் எண்ணினவளாய், அவனுக்கும் குறிக்கப்பட்ட இரவின் கடைசி யாமத்தில் சங்கேதத்தைச் செய்தாள்.

பிறகு சங்கேதப்படுத்தப்பட்ட இரவு வந்தபோது, கெட்டிக்காரிகளான அவளுடைய சேடிகள் முன்பேயோசித்து, கஸ்தூரி முதலான வாஸனைத் திரவியங்களோடு கூடினதும், எண்ணெயோடு கலந்ததும், ஏராளமான மைநீரையும், அதால் பூசப்பட்ட வஸ்திரகண்டங்களையும் ஸஜ்ஜஞ்செய்து, பெரிய பெட்டியொன்றை உள்ளே வைத்துவிட்டு, அப்போக்கிலிகளின் வரவை எதிர்பார்த்திருந்தாள்.

முதலாவது யாமத்தில் அழகிய பெரிய வேஷத்துடன் மந்திரிகுமாரன் அப்பதிவிரதையின் வீட்டிற்கு ஒருவராலும் காணப்படாமல் இரவில் நுழைந்தான். 'நீராடாத உன்னை எங்கள் யஜமானி தொடமாட்டாள்' என்று சேடிகளால் ஆதரவுடன் சொல்லப்பட்ட அவன் அப்படியேயென்று அங்கீகரித்து அவர்களோடுகூட உள்ளே சென்றவனாய், இருள்மயமான வீட்டினுள்ளறையில் மறைவாக வஸ்திராபரணங்களைக் கழற்றிவைத்துவிட்டு மைநீரால் மலினமானதும் அவர்களால் கொடுக்கப்பட்டதுமான வஸ்திரகண்டத்தை உடுத்தி, நகம் முதல் சிகைவரையில் எண்ணெய் தேய்க்கும் வியாஜத்தால்கொண்டு அவர்களால் தேய்க்கப்பட்ட கஜ்ஜலத்தை சரீரங்களில் பூசிக்கொண்டு, தன்னை அதிருஷ்டசாலியாக எண்ணிக்கொண்டான். இவ்விதம் அப்பியங்க சுகத்தை இருட்டறையில் அநுபவித்துக்கொண்டு, அநேக மனோரதங்களையெண்ணிக்கொண்டு முதல் யாமம் சென்றதையும் எண்ணவில்லை. இரண்டாவது யாமத்தில் வந்தவனான உபாத்தியாயரைப்பார்த்து பரபரப்போடுகூடின அவளது சேடிகள் 'வரருசிக்குத் தோழரான இந்த புரோஹிதர் முன்னால் தெரிவிக்காமலே இங்கு வந்துவிட்டார்' என்னசெய்வோம். இங்கு மறைந்து முகூர்த்தநேரம் இரும், என்று சொல்லிக்கொண்டு பெட்டியில் அம்மந்திரி குமாரனை வைத்து, அதற்குவெளியில் தாப்பாளிட்டார்கள். அப்படியே புரோஹிதனும் அவர்களால் ஏமாற்றப்பட்டு நீராடும் வியாஜமாய் இருட்டறையில் அழைக்கப்பட்டுக் கஜ்ஜலாப்யங்கம் செய்யப்பட்டவனாய்த் தண்டாதிபன்வரும்சமயத்தில் பெட்டியில் முதலாவது பேர்வழிபோல் வைக்கப்பட்டான். இந்த தண்டாதிபனும் கஜ்ஜலந்தேய்ப்பதால் உத்ஸாஹப்படுத்தப்பட்டு, வைசியன் வந்ததும் அதேபெட்டியில் பிரவேசிக்கச் செய்யப்பட்டான். இம்மூன்று கேடுகெட்ட மனிதர்களும், அந்த தாமிஸ்ரவாஸத்தை அப்யஸிப்பவர்போல் பெட்டியில் ஒருவருக்கொருவர் தொட்டுக்கொண்டபோதிலும் பயத்தாலும் வெட்கத்தாலும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை. தன்னுடைய சரீரத்தையும் பாக்கியத்தையும் நிந்தித்துக்கொள்பவளும், குனிந்த முகமுள்ளவளும், பதிவிரதாமணியுமான உபகோசை சேடிகளால் தூண்டப்பட்டவ

ளாய் மிகுந்த சிரமப்பட்டுத் தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டு முன்னால் இருக்கிற வைசியனை 'என் கணவனால் உம்மிடத்தில் நியாயமாக வைக்கப்பட்டிருக்கும் பொருளைக் கொடும்', என்று பிரார்த்தித்தாள். அப்படியே தருவேன் என்று அவன் பதில் உரைக்கும்போது, அவள் பெட்டியைப்பார்த்து கேட்கும்படி செய்துகொண்டு, 'ஓ! ஓ! வீட்டு தேவதைகளே இந்த ஹிரண்ய குப்தனின் மொழியைக் கேளுங்கள்' என்று பகர்ந்தாள்.

பிறகு அப்யங்கஞ்செய்துகொண்ட வைசியனை 'இரவு அநேகமாய்க் கடந்துவிட்டது. போக்கிலிகளுக்குத்தலைவனே, தன் வீடு போய்ச் சேரலாம்' என்று இஷ்டப்படாதவனாயினும் சேடிகள் கழுத்தில் கைகொடுத்துத்தள்ளவே அவன் மறைப்புருவி யொன்றையே உடுத்திக்கொண்டு, மெய்யால் பூசப்பட்டு, அடிக்கடி நாய்களால் கடிக்கப்பட்டு வெட்கமடைந்தவனாய் தன்வீடுசேர்ந்தான். அங்கும் அம்மஷியை அலம்புகின்ற வேலைக்கார ஜனத்தின் முகத்தைப்பார்க்கவும் அவன் முடியாதவனானான்.

பிறகு சேடிகளால் பின்தொடரப்பட்ட பதிவிரதாமணியான உபகோசை நந்தராஜனின் அரண்மனைசேர்ந்து தேவனே, ஹிரண்யகுப்த செட்டியார் 'என்கணவனால் அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருளை யபகரிக்கவிரும்புகிறார்' என்று அறியப்படுத்தினாள். அந்த ராஜனாலும், உடனேயே வரவழைக்கப்பட்ட வைசியன் 'என் கையில் இவருடைய பணம் சிறிதேனுமில்லை' என்று ஆணையிட்டுச் சொன்னான். அப்போது உபவர்ஷனுடைய பெண் 'மஹாராஜரே, பெட்டியில் எனது கணவரால் வைக்கப்பட்ட கிரஹதேவதைகளே இவ்விஷயத்தில் சாக்ஷிகள். அவர்களுக்கு முன்னால் இவனால் தன்வாக்கால் பொருள் அடைக்கலம் செய்யப்பட்டிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. 'ஆகையால் விசாரிக்கப்படட்டும்'என்றாள். ஆச்சரியங்கொண்ட அரசன் வேலைக்காரர்களால் அப்பெட்டியை வரவழைத்து, எவ்வளவுக்குள் சபையில் போட்டானோ, அவ்வளவுக்குள் உபகோசை 'ஓ தேவதைகளே, இந்த பூஜ்யரான செட்டியாரால் எது உரைக்கப்பட்டதோ அதை உண்மையாகச் சொல்லுங்கள்' என்று உரக்கச்சொன்னாள். சபையில் ரஹஸ்யத்தை வெளியிட்டுவிடுவாளோ என்ற பயத்தால் மிக

வும் நடுங்கின அவர்கள் 'உண்மை எங்களுக்கு முன்பு இவனல் பொருள் ஒப்புக்கொள்ளப்பட்டது' என்று சொன்னர்கள். பிறகு பதில் ஒன்றுஞ்சொல்லாத வைசியனல், அடைக்கலமாக வைக்கப் பட்ட பொருள் யாவும் ஒப்புக்கொள்ளப்பட்டு, திரும்பக்கொடுக் கப்பட்டது.

பிறகு அரசனல் பூஜிக்கப்பட்டவளும், பிரார்த்திக்கப்பட்ட வளுமான பதிவிரதை, பெட்டியை சபையில் திறந்து, இருட்டு பிண்டங்கள்போன்ற அம்மூன்று கேடுகெட்ட புருஷர்களையும் வெளிப்படுத்தினள். கிரமப்பட்டு மந்திரிகளால் கண்டுகொள்ளப் பட்ட அவர்கள் யாவருக்கும் பரிஹாஸபாத்திரமாயிருப்பதை யடைந்தார்கள். இது என்னவென்று தர்மிஷ்டனன மன்னவ னல் கேட்கப்பட்ட அவள் சகலவராலாற்றையும் நடந்தபடி சபை யில் தெரியப்படுத்தினள். ஸகல ஸபையோரும் 'நல்லொழுக்கத் தால் ரக்ஷிக்கப்பட்ட குலமாதர்களின் சரித்திரம் சிந்திக்கமுடியா தது' என்று களித்தனர். பிறமாதரை விரும்பின கெட்டநடத் தையுள்ள அந்நான்கு துஷ்டர்களும் சினங்கொண்ட வேந்தனல் ஸகல ஸொத்துக்களும் பறிக்கப்பட்டு, அவமதியுடன் நாட்டிலி ருந்து விரட்டப்பட்டவர்களாய் சண்டாளர்களாலும் திரஸ்க ரிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு, வெறுக்கத்தக்க உயிர்களைவிட் டனர். உபகோசையும் தர்மநிஷ்டனன பூபதியால் கௌரவிக் கப்பட்டு, இச்சங்கதியறிந்தவர்களாலும், உபவர்ஷராலும் வெகு மானிக்கப்பட்டவளாய், பாதிவிர்த்திய தேவதையென்று பட் டணத்து ஜனங்களால் அர்ச்சிக்கப்பட்டவளாய்க்கொண்டு, கண வனையே எப்போதும் சிந்தித்தவண்ணமாய் இல்லத்தினுள்ளேயே இருந்தாள்.

இவ்விதம் காலஞ்செல்கையில் ஹிமாசலத்தில் மிகக்கொடூர மாகத் தவஞ்செய்கின்ற வரருசியானவர், கைலாஸநாதரின் அநுக் கிரஹம்பெற்று, ரஹஸ்யத்தோடு கூடின பாணிநீயவியாகரணம் யாவையுமறிந்தார். பரமேச்வரனுடைய கட்டளையால் அதே பாணிநி சாஸ்திரம் இவரால், வார்த்திகங்களால் பூர்த்திசெய்யப் பட்டு, ஸம்ஸ்கரிக்கப்பட்டது. இவ்விதம் சந்திரகலா பூஷணரு டைய அநுக்கிரஹமாகிற அமிர்தத்தைப் பூர்ணமாய்ப்பெற்றவ

ரும், புதிது புதிதாகத்தோன்றும் வாக்கின் விலாஸத்தையுடைய வருமான, உபகோசாபதியான காத்தியாயினர் வழிநடையின் சிரமத்தைப் பொருட்படுத்தாமலே, சில நாட்களில் பாடலீபுரத்திற்குத்திரும்பினர். தாயாராலும் பெரியோராலும் நல்வரவு கொண்டாடப்பட்டவராய் அவர்கள் சரணங்களில் வழிபட்டார். உபகோசையின் அந்த ஆச்சரியமான விருத்தாந்தத்தையும் கேள்வியுற்றார். அவ்விதமான மனைவியால் இவ்வாழ்க்கை மேம்பட்டது என்றும் எண்ணினர்.

பிறகு வாருசியின்முகமாய் சப்தசாஸ்திரத்தை வர்ஷர்கேட்க விரும்பினபோது கார்த்திகேயக் கடவுளாலேயே அவ்வனைத்தும் அவருக்குப் பிரகாசிக்கப்படுத்தப்பட்டன. வியாடியும் இந்திரதத்தனும் வர்ஷோபாத்தியாயரிடமிருந்தே பாணினீயம் முதலான சாஸ்திரத்தையறிந்தனர். பிறகு சந்தோஷங்கொண்ட வியாடியாலும்இந்திரதத்தனும் குருதக்ஷிணை யாதுவேண்டும் என்று அறிவிக்கப்பட்ட வர்ஷர் ஒரு கோடிப்பொன்னை விரும்பினர். அப்படியே தருகிறோம் என்று ஒப்புக்கொண்டு ஒருவருக்கொருவர் யோசனைசெய்து, அவர்கள் வாருசியையழைத்துச் சொல்லலானார்கள்.நமது உபாத்தியாயரால் ஒருகோடிப்பொன் குருதக்ஷிணையாகக் கேட்கப்பட்டது. இவ்வளவுபொன் நந்தராஜன் தவிரமற்ற அரசர்களிடத்தில் அடையமுடியாது. அவனோ 99 கோடிபொன்னுள்ளவன். முன்பே உன்மனைவியை தர்மத்தால் ஸஹோதரியென்று மானித்திருக்கிறான். ஆகையால் யாசிக்கப்பட்டால் உனது குணங்களால் களித்துக்கட்டாயமாய்த்தருவான். அவன் இப்போது அயோத்திக்கு ராஜனாய் வஸித்துவருகிறான். வா அங்கேயே செல்வோம்—என்று பிறகு அம்மூன்று ஸஹபாடிகளும் அயோத்தியை யடைந்தனர். அந்தோ! அவர்கள் வந்தபோதே நந்தன் விண்ணுலக மேகினன். ராஜ்யத்தில் பெரிய கலக்கம் ஏற்பட்டது.

(தொடரும்)

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரீ.

---

# திருநாவுக்கரசர்.

(௩௨-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு தருமசேனர் திருநாவுக்கரசரானமையை அறிந்த னர் சமணர்; 'தமது பெருமைக்குக் குறைவுவருமே' என எண் ணினர்; தங்களது அரசனிடத்திலே சொல்லிக் கொண்டனர். கேட்ட பல்லவ அரசனாகிய மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரை யழைத்து வருமாறு மந்திரிமார்களை ஏவினன். நாவுக்கரசர் "நாமார்க்குங்குடியல்லோம்" என்ற திருத்தாண்டகத்தைப்பாடி மறுத்தனர். கடைசியில் அவர்கள் வணங்கிவேண்ட அரசனி டத்திற்குச் சென்றனர். செல்லலும், அரசன் சமணகுருமார்க ளது உத்திரவின்படி அவரை நீற்றறையில் இடுவித்தான். நாவுக் கரசர் அங்கே இருந்து "மாசில்வீணையும் மாலைமதியமும்" என்ற திருக்குறுந்தொகையைப் பாடினர். அந்த நீற்றரை ஆண்டவ னது திருவருளால் அவர்க்கு வீணாகானமும் சந்திரனும் தென்ற லும் இளவேனிலும் பொய்கையும்போலக் குளிர்ந்திருந்தது. எழு நாட்களுக்குப்பிறகு அந்த நீற்றறையைப்பார்க்க திருநாவுக்கரசர் இனிது களிப்புற்றிருந்தனர். பின்னர்ச்சமணர்கள் நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்ணுமாறு கொடுத்தார்கள். அது நாவுக்கரச ருக்கு நல்ல அமுதமாயிற்று அப்பால், சமணர்கள் அரசனது யானையை ஏவினார்கள். ஏவலும், திருநாவுக்கரசர் "சுண்ணவெண் சந்தனச்சாந்தும்" என்ற தொடக்கத்தையுடைய திருப்பதிகத் தைத்தொடங்கி ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "நாம் அஞ்சு வதியாதொன்றுமில்லை; அஞ்சவருவதுமில்லை" என்று அமைத்துப் பாடியருளினர். யானை நாவுக்கரசரை வலமாக வந்து பாகர்களைக் கொன்று சென்றது. கடைசியாகக் கல்லோடு சேர்த்துக் கயிற் றினாலே கட்டிக்கடலிலே தள்ளச்செய்தார்கள். அக்கால் திரு நாவுக்கரசர் "சொற்றுணைவேதியன்" என்னும் தொடக்கத்தினையு டைய நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளினர். சிவபி

ரான் திருவருளால் அக்கல்லே தெப்பமாகியது, கரையை அடைந் தார்; திருப்பாதிரிப்புலியூருக்குப் பக்கத்திலே சேர்ந்தார்; அவ் வூர் சிவாலயத்துட் சென்றார்; "ஈன்றாளுமாய்" என்னும் முதலை உடைய திருப்பதிகத்தைப்பாடி அங்கேயே தங்கியிருந்தார்.

இங்ஙனம் சிலநாட்கள் இருந்து பின்னர்த் திருநாவுக்கரசர் திருவதிகைப்பதிக்குச் செல்ல எண்ணினார்; சில தலங்களை வண ங்கிக் கெடிலநதியைக் கடந்தார்; அதிகைப்பதி வாழ்நர் எதிர் கொண்டு வணங்கி அழைக்க ஊருட்சென்று ஆலயத்தை அடைந் தார்; "ஏழ்மையேன் நான்பண்டிகழந்தவாறே" எனமுடியும் எழை த்திருத்தாண்டகத்தைப் பாடினார். சமணர்களது துர்ப்போதனை களுக்கு உள்ளான பல்லவராசன் அதிகைப்பதிக்குவந்தான்; திரு நாவுக்கரசருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்; தான் அறியாதுசெய்த பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டினான்; சைவசமயத்தைத்தழுவினான்; திருவதிகையிலே குணதரேச்சரம் என்னும் கோயிலைக்கட்டினான்.

அப்பால் திருநாவுக்காசர் பலதலங்களையும் வணங்கவேண் டும்என்னும் விருப்பிற் சென்றார்; பெண்ணாகடத்திற்குப்போனார்; ஆங்குள்ள திருத்தூங்கானை மாடம் என்னும் ஆலயத்துட்சென் றார்; கடவுளை வணங்கினார்; எனது உடலிலே சூலம், இடபம் ஆகியவற்றின் குறியை அமைக்கவேண்டும்" என்னும் குறிப்பால் "பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" என்னும் திருப்பதிகத்தைப்பாடினார். கடவுளும் தம்முடைய பூதகணங் களைக்கொண்டு அங்ஙனமே செய்வித்தார்; பல தலங்களுக்கும் சென்று கடவுளைவணங்கிச் சிதம்பரத்துக்குவந்தார்; அங்கேயே "அரியானை அந்தணர் தம் சிந்தையானை" என்னும் பெரிய திருத் தாண்டகம் முதலிய பாடல் திருத்தொண்டும், உழவாரத்திருத் தொண்டும்செய்து வருவாராயினர். அக்கால் அடியார்கள் சொல் லத் திருஞானசம்பந்தரது பெருமையை உணர்ந்தார்; சீர்காழிக் குச்சென்று திருஞானசம்பந்தரை வணங்க எண்ணினார்; சிதம்ப ரத்தை நீங்கிச் சீர்காழியின் எல்லையை நெருங்கினார். நெருங்கவும், திருஞானசம்பந்தர் பேரன்புடன் அவரை எதிர்கொண்டனர்; திரு நாவுக்காசருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர். நாவுக்

காசரும் திருஞானசம்பந்தருடைய திருவடிகளிலே வணங்கினர். தம்மை வணங்கிய திருநாவுக்காசரைத் தாமும் வணங்கி "அப்பரே" என்று அழைத்துக் கரங்களைப்பிடித்து எடுத்தார். அன்று முதல் திருநாவுக்காசருக்கு 'அப்பர்' என்ற பெயர் உண்டாயிற்று.

பின்னர் திருநாவுக்காசருக்குப் பலதலங்களுக்கும் செல்ல வேண்டும் என்ற விருப்புத் தோன்றிற்று. சம்பந்தரிடம் விடை பெற்றார். பலதலங்களுக்கும் சென்றார். திருச்சத்தி முற்றத்தை அடைந்தார். "அடுதிறற் கூற்றங்குமைப்பதன் முன்—பூவாரடிச் சுவடென் மேற் பொறித்துவை" என்று பாடினார். சத்திமுற்றப்பெருமான் "நல்லூருக்குவா" என்றுஅழைத்தார். அங்ஙனமே சென்றார். நல்லூராண்டவர் "வாகீச, உனது கருத்தை நிறைவேற்றுகின்றோம்" என்று கூறித்தம்முடைய திருவடிகளை அப்பாது சிரசின்மேலே சூட்டியருளினார். உடனே அப்பர், "நினைந்துருமடியாரை" என்னும்தாண்டகத்தைத் தொடங்கிப்பாட்டடி தோறும் "திருவடி என்தலைமேல் வைத்தார் எம்பெருமானார் நல்லவாறே" என்று பாடினார். பலதலங்களுக்கும் சென்று திருப்பழனந்தை அடைந்தார். அங்கிருந்து திங்களூர் வழியாகச் செல்வாராயினர்.

செல்லலும் வழியிலே குளம்,சத்திரம்,தண்ணீர்பந்தல், முதலிய காணப்பட்டன. உள்ளே சென்றார்; இது திருநாவுக்காசரது" என்று யாண்டும்அழகாக எழுதப்பட்டிருப்பதைக்கண்டார்; வியப்புற்றார்; அதன் வரலாற்றை அறியஎண்ணி உசாவினர். 'தம்முடைய பிள்ளைகளுக்கும், தாவரம் சங்கமம் ஆகிய பொருள்களுக்கும் திருநாவுக்காசு என்று பெயரிட்டழைக்கும் அன்பராகிய அப்பூதி அடிகள் செய்யும் திருதொண்டு' என்பதைத் தெரிந்து கொண்டார்; அவரைக் காணவேண்டித் திங்களூர்க்குச் சென்றார். இருவரும் பார்த்துக்கொண்டனர். அப்பூதி அடிகளது வேண்டுகோட்கிணங்கி அங்கே திருவமுது செய்ய உடன்பட்டார். அப்பூதி அடிகளும், அவரது மனைவியாரும் உணவினைச் சமைத்து மூத்த திருநாவுக்கரசை "தோட்டத்திற்குப்போய் வாழைக்குருத்து ஒன்றை அரிந்துகொண்டுவா" என்று அனுப்பினார். அவனும் சென்று அரிந்தான். ஓர் அரவம் அவனது கை

யிலே தீண்டிற்று. அதனைப் பொருட்படுத்தாது இலக்குருத்தைத் தாயாரிடம் கொடுத்து இறந்தான். மகன் இறந்ததையும் பொருட்படுத்தாது அவர்கள் திருநாவுக்கரசருக்கு உணவுசெய்விக்க முயன்றார்கள். தெய்வத் தவக்குறிப்பால் வாகீசாது உள்ளத்தே தடுமாற்றந்தோன்ற உண்மையை உணர்ந்தார்; ஆலயத்துக்குச் சவத்துடன் சென்று "ஒன்றுகொலாம் அவர் சிந்தை" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். இறந்த குமாரன் உயிர் பெற்றெழுந்தான். திருநாவுக்கரசர் திருவமுது செய்தார். "சொன்மாலைபயில்கின்ற" என்ற பதிகத்திலே "அஞ்சிப்போய்க் கலிமெலியலோம்பும் அப்பூதி" என்று அப்பூதி அடிகளைச் சிறப்பித்தார். திருப்புகலூரிலே முருகனாது மடத்திலே சில நாட்கள் தங்கினார். ஞானசம்பந்தர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர், குங்குலியக் கலயர் முதலாயினருடன் தங்கினார். திருவீழிமிழலையை அடைந்தார். வீழிநாதரால் வட்டங்கொடாதபடிக்காசு தந்தருளப் பெற்றார். பஞ்சத்தால் வருந்தியவர்களுக்கு உணவளித்தார்.

அவ்வூரிலே இருந்த பஞ்சம் நீங்கவும் திருஞானசம்பந்தருடன் வேதாரண்யத்திற்குச் சென்றார். அங்கே அடைபட்டுக்கிடந்த கதவு திறக்குமாறு "பண்ணினேர் மொழியாள்" என்றும், "இரக்கமொன்றிலீர்" என்றும் வரும் திருப்பதிகங்களைப் பாடினார். கதவுதிறக்கப்பட இருவரும் கடவுளை வணங்கினார். திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டிற்குச் சென்றார். இவர் கடவுள் அழைக்கத் திருவாய்மூர்க்குச் சென்று வணங்கினார். திருவாவடுதுறைக்குப்போய் "மாயிருஞாலமெல்லாம்" என்ற திருப்பதிகத்தால் திருஞானசம்பந்தருக்கு அருளிய திறத்தை வியந்து பாடினார். பழையாறைக்குச்சென்று சமணரால்மறைக்கப்பட்ட கடவுளை அருள்வழிச் சென்ற அரசனது துணையால் வணங்கினார்; பலதலங்களுக்கும்போய்த் திருக்காளத்திமலையை அடைந்தார்; கண்ணப்பரை வணங்கி அங்கேயே சிலநாட்கள் தங்கினார்.

(தொடரும்)

தண்டமிழ்த் தொண்டன்.

---

# மதிப்புரை.

## ஹிந்துமதத்தின் பிராணாதாரம் ஜாதி அமைப்பும் பிராம்மண்யமுமே.

இப்பெயர்வாய்ந்த லாலுகுடியிலிருக்கும் ரிடையர்ட் அஸிஸ்டெண்டு இஞ்சினீயர், ராவ்ஸாஹிப் பிர்மஸ்ரீ L. A. ரெங்கஸாமி அய்யர் அவர்களால் அனுப்பப்பட்ட ஒரு புஸ்தகத்தை வரப்பெற்றோம்.

ஹிந்து, மதம், ஜாதி, பிராமண்யம் என்கிற இப்பதங்களின் உண்மையான அர்த்தத்தைச்சிறந்த பண்டிதர்களான பலமஹான்கள் வெளியிட்டிருந்தாலும் சமீபகாலத்தில் தோன்றி சகல சாஸ்திரங்களிலும் தமக்கு விசேஷமான அறிவேற்பட்டிருக்கின்றது என்று தாமாகவே தீர்மானம் செய்துகொண்ட சிலர் இந்தப் பதங்களுக்குத்தமக்குத்தோன்றியவாறுபொருளைக்கூறிசாமான்யஜனங்களைமோசம்செய்துதம் வழிகளில்இழுத்துக்கொண்டுபலவிதமாய் ஹிம்ஸிக்க முன்வந்திருக்கிறார்களென்பது யாவரும் அறிந்தவிஷயமே. இவ்விதம் நடக்கும் அநீதியைப்பார்த்து மனம் ஸஹியாமல் தம்மாலியன்றவரையில் லோகோபகாரத்தைச் செய்வோம் என்று இதற்குமுன்னும் சில நூல்களை இயற்றி அச்சிட்டு வெளியிட்டிருப்பதுடன் தற்காலம் இதையும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்நூலில் ஜாதி, மதம் இவ்விரண்டும் வேறாகப் பிரிந்திருக்கக்கூடியதல்லவென்பதற்குப் பல உவமைகளால் நன்கு விளக்கிக்காட்டி இவ்விதமே நம் சாஸ்திரங்களுடைய கருத்தென்பதற்கும் சாஸ்திராதாரங்களையே மேற்கோளாகக் காட்டாமல் மேதாவிகளான பலர் மேனாட்டார்களின் அபிப்பிராயங்களையே மேன்மையாகக் கொண்டாடுகிறபடியால் இந்த விஷயத்தில் அவர்களும் நம் சாஸ்திரார்த்தப்படியே கூறியிருக்கிறார்களென்று சிரமப்பட்டுத்தேடிக் கண்டுபிடித்துத் தகுந்த மனுஷ்யர்களான 32 பேர்களுடைய அபிப்பிராயங்களை நன்கு வெளியிட்டு 'ஜாதி, மதம் இவ்விரண்டும் ஒன்றே. இதைப்பிரிக்கவோ, சேர்க்கவோ நம்மால்

முடியாது' என்று நிரூபித்துப் பிறகு எல்லா வித்வான்களாலும் ஒரேமொழியாய்க் கூறப்படுகின்றதாயும் வெகு காலமாய் உலகில் நடைபெற்றுவருகிறதாயுமான இதை மாற்றவேண்டுமென்று சிலர் எடுத்துக்கொண்டிருக்கும் பிரயாஸம் ஒருகாலும் நடைபெறுதென்றும் நம்மைப் படைத்தாளும் பகவான் ஒரு சமயமும் கைவிட மாட்டாரென்றும் தெளிவாய் அறிவித்திருக்கிறார். இதனால் பலருக்குச் சந்தேக நிவிருத்தி ஏற்படலாமென்பது எனது அபிப்பிராயம். இதன் கிரயம் அணா 3.

---

## மானிடவாழ்க்கையில் ஸமத்துவம் அஸாத்தியம்.

ராவ்சாஹிப் பிர்மஸ்ரீ L. A. செங்கஸாமி அய்யரவர்களால் அனுப்பப்பட்ட இப்புத்தகமும் நமது பார்வைக்குக்கிட்டியது.

இதில் ஸமத்வமென்பது நம்மால் செய்துகொள்ளக்கூடிய காரியமல்ல. பகவானால் செய்யப்படவேண்டிய காரியம். பல தேசங்களிலும், பல ஜாதிகளிலும், பல காரியங்களிலும், ஸமத்வமன்றியிலேயே கீழ், மேல் என்கிற வித்தியாஸத்தைப் பாராட்டியே அவரவர்களும் நடத்திவருகிறார்கள். அவசியம் கவனிக்க வேண்டிய அவைகளைவிட்டு, கவனிக்கவேண்டிய அவசியமில்லாத ஒரு சின்னவிஷயத்தில் அர்த்தமில்லாத ஸமத்வமென்கிற வார்த்தையைச் சொல்லிக்கொண்டு வீணாக் கலகத்தை விருத்திசெய்கிறார்களென்றும் எவ்வளவு சிரமப்பட்டாலும் ஒருகாலும் இந்தக் காரியம் நடைபெறுதென்றும் நன்கு கூறப்பட்டிருக்கிறது. இக்காலத்திற்கு இந்தமாதிரிக் கிரந்தங்கள் அடிக்கடி வெளிவருவது நம் சநாதன தர்மரக்ஷணத்திற்கு உபகாரமாயிருக்கும். இவ்வித நற்காரியத்தில் முயற்சிக்கும் பிர்மஸ்ரீ அய்யரவர்களுக்கு திட சரீரத்தையும், தீர்க்காயுளையும் அளிக்கவேண்டுமாய் ஸ்ரீ பகவானை பிரார்த்திக்கிறோம். இதன் விலை ரூ. 0—1— 6.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

---